26th February 1969]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதை அங்கத்தினரிடம் அவர்கள் எந்த மொழியில் சொன்னார்கள் ?

திரு. என். ஆர். தியாகராஜன் : இங்கே நாம் கற்றுக் கொடுத்த மொழியில் பேசினார்கள். தாங்கள் பேசிக்கொள்ளும்போது வேறு மொழியில் பேசுகிறார்கள்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : இந்த ஆதிவாசிகள் பள்ளி களில் எத்தனை மாணவர்கள் படிக்கிறார்கள் ? எத்தனை வருஷங்க ளாக அந்தப் பள்ளி செயல்படுகிறது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : சேலம் மாவட்டத் தில் வளவந்தநாடு என்ற இடத்தில் ஒரு உயர்தரப் பள்ளி இருக் கிறது. அதில் 743 மாணவர்களும் 65 மாணவிகளும் படிக்கிறார்கள். எப்போது துவக்கப்பட்டது என்ற தகவல் இல்லை.

City Compensatory Allowance for T.V.S. High School Teachers

* 54. Q.—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. Rajah Iyer) : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether the teachers of the T.V.S. High School, Madurai are denied the grant of City Compensatory Allowance; and

(b) if so, the details thereof?

டி.வி.எஸ். உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு நகர ஈட்டுப்படி

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரையிலுள்ள டி.வி.எஸ். உயர்நிலைப் பள்ளியிலுள்ள ஆசிரியர்களுக்கு நகர ஈட்டுப்படி மறுக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) & (இ) ஆம். இந்த பள்ளி மதுரை நகர எல்லைக்குள் அமையாததால்.

Craft Instructors with Vidwan Qualification.

* 55 Q.—THIRU G. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether Craft Instructors in Government Secondary Schools, acquiring Vidwan qualification in Tamil, are eligible for being posted as Tamil Pandits on identical scales of pay?

வித்வான் பட்டம் பெற்ற கைத்தொழில் ஆசிரியர்கள்

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

அரசாங்க உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள கைத்தொழில் ஆசிரியர்கள் தமிழில் வித்வான் பட்டம் பெற்றவராக இருந்தால்

[26th February 1969

தமிழ்ப் பண்டிதர்களுக்குரிய சம்பள விதத்தில் சம்பளம் பெறும் தமிழ் பண்டிதர்களாக நியமிக்கப்படத் தகுதியுள்ளவர்களா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : ஆம்.

Sethusamudram Project Report

* 56 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to siate—

(*a*) whether the project report of the Special Engineering Experts on the Sethusamudram Project has been received by the Government of Tamil Nadu from the Central Government; and

(*b*) the estimated cost thereof?

சேதுசமுத்திர திட்டம் பற்றிய அறிக்கை

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கிழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேதுசமுத்திர திட்டத்தைப் பற்றிய விசேஷ பொறியியல் வல்லுனரின் திட்ட அறிக்கை மத்திய அரசிடமிருந்து தமிழக அரசினால் பெறப்பட்டதா ?

(இ) அதில் எவ்வளவு செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) இந்திய அரசின் சேதுசமுத்திரத் திட்ட ஆலோசனைப் பொறியாளரிடமிருந்து சேதுசமுத்திர திட்டம் குறித்து சுற்றறிக்கை கிடைத்துள்ளது.

(இ) இத்திட்டத்திற்கு ரூ. 37.50 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ராமநாதபுரத்திற்கு அருகே தோண்டினால் அதிகம் செலவாகும் என்பதால் அதற்குப் பதிலாக ராமேஸ்வரத்திற்கு அருகே அதைச் செய்தால் செலவு குறையும் என்று கூறப்பட்டதே, இந்த 35 கோடி எந்தத் திட்டத்தைச் சேர்ந்தது? மத்திய அரசாங்கம் என்ன சொல்லியது? நம் அரசாங்கம் என்ன சொல்கிறது? எப்போது அது அமுலுக்கு வரும் என்று அரசு தெரிவிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : ராமேஸ்வரம் பக்கத்தில் அமைக்கிற திட்டத்திற்கு 37.50 கோடி ஆகிறது. மண்டபம் கால்வாய்க்கு பக்கம் அமைக்க ரூ. 57.60 கோடியாகிறது. ராமேஸ்வரம் பக்கத்தில் அமைக்கிற திட்டத்தை இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது.